பொது நிருவாக சுற்றறிக்கை : 12/2019

எனது இலக்கம் :- VI/பி.ஞ்.உ./Cir/TS
பொது நிருவாக மற்றும்
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2019.05.21

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத்து தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள் யாவருக்கும்

**மொழிபெயர்ப்பாளர் சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் மொழிபெயர்ப்பாளர் சேவையில் விசேட வகுப்பிற்கு சேவை மூப்பின் அடிப்படையில் தரமுயர்த்தல்**

1994 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதிய 829/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மொழிபெயர்ப்பாளர் சேவை பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளின்படி விசேட வகுப்பிற்கு தரமுயர்வு பெறுவதற்கு, பின்வரும் தகைமைகளை கொண்டுள்ள மொழிபெயர்ப்பாளர் சேவையின் அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. 2007.08.24 ஆந் திகதிய மற்றும் 06/2006(IV) ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையில் MN 6-2006 (படிநிலை 23) சம்பளத் தொகுதி இப் பதவிக்கு உரியதாவதுடன், அதற்கு ஏற்புடையதான மாதச் சம்பளம் ரூபா 25,345 – 450 x 15 – 31,545 ஆகும்.

03. மதிப்பீட்டு முறை :-

விசேட தரத்தின் வெற்றிடங்களில் 40% ஆன அளவிற்கு ஏற்புடையதான நியமனங்கள் சேவை மூப்பு அடிப்படையில் மேற்கொள்ளப்படும். இதற்காக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நியமனம் செய்யப்படும் சபைமூலம் சேவை மூப்பு மற்றும் அனுபவம் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் மொத்த புள்ளிகளின் ஒழுங்குமுறைக்கமைவாக முதன்மை தீர்மானிக்கப்படும்

| | | மொத்த புள்ளிகள் |
|---|---|---|
| I. | சேவை மூப்பு | 60 |
| II. | அனுபவம் | 40 |
| | | 100 |

**I. சேவை மூப்பு :-**

சேவை மூப்பின் பொருட்டு அலுவலரொருவருக்கு, மொழிபெயர்ப்பாளர் சேவையில் வகுப்பு 1 இல் 08 ஆண்டுகள் செயலூக்கமிக்க மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்த பின்னர், அடுத்து வரும் செயலூக்கமிக்க மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள ஓராண்டுக்கு 06 புள்ளிகள்படி ஆகக்கூடியதாக 60 புள்ளிகள் வழங்கப்படும். இதன்போது 06 மாதங்களுக்கு மேற்பட்ட ஓராண்டுக்கு குறைந்த சேவைக்காலம் பொருட்டு 03 புள்ளிகள் வழங்கப்படுவதுடன், 06 மாதங்களுக்கு குறைவான காலப்பகுதியின் பொருட்டு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

**II. அனுபவம் :-**

மொழிபெயர்ப்பாளர் சேவையில் விசேட வகுப்பில் பதில் கடமையாற்றும் அலுவலராக திருப்திகரமான வருடமொன்றுக்கு 04 புள்ளிகள் படி ஆகக்கூடியதாக 40 புள்ளிகள் வரை அனுபவத்திற்காக புள்ளிகள் வழங்கப்படும்.

04. விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான தகைமைகள்

I. பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

II. மொழிபெயர்ப்பாளர் சேவையில் வகுப்பு 01 இல் 08 ஆண்டுகள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதும் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் 08 வேதனவேற்றங்களை உழைத்துப் பெற்றிருத்தல் வேண்டும்.

III. உரிய காலப் பகுதிக்குள் ஏற்புடைய வினைத்திறன் காண் தடைப் பரீட்சைகளை சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

IV. உரிய காலப் பகுதிக்குள் இரண்டாவது மொழித் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

05. அமைச்சு மற்றும் திணைக்களங்களில் மொழிபெயர்ப்பாளர் சேவைக்குரிய விசேட வகுப்பிற்கு தரமுயர்விற்கான தகைமை பெறுகின்ற எல்லா அலுவலர்களும் இத்துடன் இணைத்துள்ள மாதிரி படிவம் பிரகாரம் தாயரித்துக்கொண்ட விண்ணப்பங்களை தமது திணைக்களத்த தலைவர்களிடம் சமர்ப்பித்தல் வேண்டும். திணைக்களத்து தலைவர் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானதென சான்றுப்படுத்தி விண்ணப்பத்தாரியின் பிறப்புச் சான்றிதழ், நியமனக்கடிதம், நிரந்தரப்படுத்திய கடிதம், வகுப்பு 1 இற்கு உள்ளீர்க்கப்பட்ட கடிதம், கல்விச் சான்றிதழ்கள் மற்றும் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஏனைய சான்றிதழ்களின் சான்றுப்படுத்திய பிரதிகளுடன் தமது அமைச்சு செயலாளரின் பரிந்துரைகள் சகிதம் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி 2019.06.26 ஆகும்.

07. தயவு செய்து இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அறிந்துகொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

ஒப்பம்./ ஜே.ஜே.ரத்னசிறி
செயலாளர்
பொது நிருவாகம் மற்றும்
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

மாதிரி விண்ணப்பப்படிவம்

**1994 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதிய 829/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மொழிபெயர்ப்பாளர் சேவை பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைவாக விசேட வகுப்பிற்கு தரமுயர்த்தும் விண்ணப்பப்படிவம்**

01. சேவையாற்றும் இடம்

i. அமைச்சு :- ....................................................................................................

ii. திணைக்களம் :- ....................................................................................................

iii. உப அலுவலகம் :- ....................................................................................................

02. நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அலுவலரின் பெயர்:- திரு/திருமதி/செல்வி........................................................................................................................
........................................................................................................................................

03. பெயர் மாற்றியிருப்பின் திருத்தம் செய்யப்பட்ட பெயர் :- ........................................................................................
........................................................................................................................................

04. பிறந்த திகதி :- .........................................................

05. நிரந்தர முகவரி :-
........................................................................................................................................
........................................................................................................................................

06. மொழிபெயர்ப்பாளர் சேவையில் முதல் நியமனம் பெற்ற திகதி :-
........................................................................................................................................

07. i நியமனக் கடிதத்தின் இலக்கம் :- ........................................

ii நியமனத் திகதி :- ........................................

08. நீங்கள் சேவையில் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ளீரா? :- ஆம்/இல்லை

09. கல்வித் தகைமைகள் :-

i ..............................................................................................................................
..................................................................................................................................

ii ..............................................................................................................................
..................................................................................................................................

iii ..............................................................................................................................
..................................................................................................................................

iv ..............................................................................................................................
..................................................................................................................................

v ..........................................................................................................................................

..........................................................................................................................................

10. மொழிபெயர்ப்பாளர் சேவையில் வகுப்பு 1 இல் 08 ஆண்டுகள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த திகதி :- ..........................................................................................................................................

11. பதில் கடமையாற்றும் அலுவலராக சேவையாற்றியிருப்பின் நியமனத் திகதி :- ..........................................................................................................................................

12. ஏற்புடைய வினைத்திறன்காண் தடைப் பரீட்சை சித்தியடைந்த திகதி:- ......................................................

13. ஏற்புடைய மொழி தேர்ச்சி சித்தியடைந்த திகதி :- .......................................

14. ..........................................................................................................................................
அமைச்சில்/ திணைக்களத்தில்/ அலுவலகத்தில் மொழிபெயர்ப்பாளர் சேவையில் ……………. (வகுப்பு) ஆம் வகுப்பின் மொழிபெயர்ப்பாளராக சேவையாற்றும்.......................................................................................... (முழுப் பெயர்) ஆகிய நான், மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள எல்லா தகவல்களும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும், 1994 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதிய 829/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மொழிபெயர்ப்பாளர் சேவை பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைவாக விசேட வகுப்பிற்கு தரமுயர்வு பெறுவதற்கு தகைமைபெறுவேன் எனவும், வெளிப்படுத்துகின்றேன்.

திகதி :- ..................................                    ..............................................
அலுவலரின் ஒப்பம்

<u>திணைக்களத்து தலைவரின் சான்றிதழ்</u>

..........................................................................................................................................

அமைச்சில்/ திணைக்களத்தில்/ அலுவலகத்தில் ……………. ஆம் வகுப்பில் மொழிபெயர்ப்பாளர் பதவி வகிக்கும் திரு/திருமதி/செல்வி ……………………………………………………………… விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தில் 1 தொடக்கம் 12 வரையிலான தகவல்கள் அவரது சுய விபரக் கோவைக்கமைய சரியானதென சான்றுப்படுத்துகின்றேன். இவ்வலுவலர் தொடர்பில் பின்வரும் தகவல்களை சமர்ப்பிக்கின்றேன்.

I. சேவைக் காலப்பகுதியில் பெற்றுக்கொண்டுள்ள அரைநாள் சம்பளம்/சம்பளமற்ற லீவு தொடர்பான விபரங்கள் :-

..............................................................................................................................................
............................................................................................................................................

II. தரமுயர்வு கோருகின்ற திகதியில் அலுவலர் மொழிபெயர்ப்பாளராக சேவையாற்றிய முழுச் சேவைக் காலம் :- ............................................................

III. 08 ஆண்டுகளுள் எல்லா சம்பளவேற்றங்களையும் உழைத்துக்கொண்டு, திருப்திகரமானதும் செயலூக்கமிக்கதுமான சேவைக்காலம் உள்ளதா என்பது தொடர்பாக:-
.........................................................................................................................................

IV. அலுவலருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா? (இருப்பின் விபரங்களை குறிப்பிடவும்)
……………………………………………………………………
………………………………………………………………………………………………

V. பதில் கடமையாற்றிய காலம்

| சேவை நிலையம் | நாட்களின் எண்ணிக்கை | காலவெல்லை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

VI. அமைச்சு/ திணைக்களம்/ நிறுவனத் தலைவரின் பரிந்துரை :-

................................................... ஆந் திகதி தொடக்கம் இவ்வலுவலர் விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதனை பரிந்துரை செய்கின்றேன்/ செய்யவில்லை.

திகதி :- .............................

திணைக்களத் தலைவரின் ஒப்பம் :- ..............................
பெயர் :- ..........................................................................
பதவி :- ..........................................................................
உத்தியோகபூர்வ முத்திரை

<u>அமைச்சு செயலாளரின் பரிந்துரை</u>

திணைக்களத்து தலைவரால் மேற் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரையை நான் பரிந்துரை செய்கின்றேன்.

திகதி :- ............................

அமைச்சின் செயலாளரின் ஒப்பம் :- .....................................
உத்தியோகபூர்வ முத்திரை